## தமிழ்நாடு சட்ட மன்றம்

---

**திங்கட்கிழமை, 1973 பிப்ரவரி 5.**

**சென்னை** செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற **மண்டபத்தில்** பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் **(திரு. ம. பொ. சிவஞானம்)** அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### *Rajah Mirasdar Hospital and Thanjavur Medical College Hospital.*

* 3 *Q*.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether two different standards are now being followed regarding extra beds in Rajah Mirasdar Hospital and Thanjavur Medical College Hospital; and

(*b*) if so, the reasons therefor?

### *தஞ்சாவூர் ராஜா மிராசுதார் மருத்துவமனை & தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை*

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் ராஜா மிராசுதார் மருத்துவ மனையிலும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும் கூடுதலாகப் படுக்கை வசதிகள் அளிப்பது குறித்து இரண்டுக்கும் வெவ்வேறு முறைகள் தற்போது பின்பற்றப் பட்டு வருகின்றனவா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) வெளி நோயாளிப் பிரிவு ராஜா மருத்துவமனையில் மட்டுமே இயங்கி வருவதாலும் மற்றும் உடனடியாக மருத்துவம், அறுவை சிகிச்சைகள் அளிக்கப்படவேண்டியுள்ள நோயாளிகளும், மருத்துவ ஆய்வு செய்யப்பட

வேண்டிய நோயாளிகளும் ராஜா மருத்துவ மனையில் அதிகப்படியாக அமைக்கப்பட்டுள்ள 160 படுக்கைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டு பின்னர் தொடர் மருத்துவ சிகிச்சைக்காக தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு தேவைப்படுகிறவர்கள் மாற்றப்படுகின்றனர்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்த இரு மருத்துவ மனைகளும் மருத்துவக் கல்லூரியின் சார்புடையவையாக நடத்தப்படுகின்றன. ஒரு மருத்துவ மனையில், அதாவது ராஜா மிராசுதார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள படுக்கைகளுக்கு மேலாக, சில சமயங்களில் 400 படுக்கைகள் (கிட்டத்தட்ட 75 சதவிகிதம்) அதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் நான் அறிகிறேன். ஆனால் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உபரி படுக்கைகளே இல்லை என்ற நிலைமை இருக்கிறது. அதனாலே வசதி உள்ளவர்களும், டாக்டர்களுக்கு வேண்டியவர்களும்தான் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுகிறார்கள் என்றும், அது தனியாருடைய 'நர்சிங் ஹோம்' போல இயங்குகிறதாகவும், லஞ்சம் வாங்குவதற்கு வாய்ப்புடையதாகவும் இயங்குகிறது என்று சொல்லப்படுவது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் சொன்னதுபோல, லஞ்சம் வாங்குகிற அளவுக்கு வசதியாக இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. கொடுத்தவர்களாக இருந்தால், அவர்களுக்குத் தெரியக்கூடும். ஆனால் அதற்கு மாறாக எந்த ஒரு மருத்துவ மனையிலும் அதிகம் பேர் சேர விரும்புவது இயற்கை. ராஜா மருத்துவ மனை தஞ்சை நகரில் இருப்பதால், நகரத்தில் உடனடியாக சிகிச்சை பெறபலர் செல்கிறார்கள். உடனடி சிகிச்சைக்கு வருகிறவர்களில் சிலரைப் படுக்கையில் வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதற்காக ஏற்கெனவே உள்ளதைவிட 120 படுக்கைகள் 'எக்ஸ்டிரா' வாக அங்கே அமைக்கப்பட்டு அந்த வசதி அளிக்கப்படுகிறது. ஆனால் தொடர்ந்து சிகிச்சை அளிக்க வேண்டியிருந்தால், அவர்கள் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு மாற்றப்படுகிறார்கள். இதுபற்றி மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் பரிசீலனை செய்கிறார்கள். மறுபடியும் ஏதாவது திருத்தம் செய்ய வேண்டுமானால் பரிசீலனை செய்யப்படும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இந்த முறையை மாற்றி, மற்ற மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் இருப்பதைப்போல, ஒரு நிலைமையை தஞ்சையில் உருவாக்க இருப்பதாக அமைச்சரவர்கள் இந்த அவையில் முன்பு

குறிப்பிட்டார்கள். அதற்காக அதிகாரிகளும் தஞ்சை வந்ததாக நான் அறிகிறேன். அவர்களும் நிலைமைகளை மாற்றுவது நல்லது என்று கருதியதாகச் சொன்னார்கள். ஆனால் தற்பொழுது அதில் ஏதோ தடங்கல் இருப்பதாக அறிகிறேன். அதனை அமைச்சரவர்கள் விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சில பகுதிகளை இந்த மருத்துவ மனையிலிருந்து அந்த மருத்துவ மனைக்கு மாற்றும்போது, அங்கு உள்ள பலதுறை டாக்டர்களின் பணியைக் கருத்தில் கொண்டு அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. கல்லூரி கட்டப்படுகிற நிலையில், இந்தத் துறைக்கு இவ்வளவு இடம் இருக்க வேண்டுமென்ற ஒரு கருத்து உருவாகியுள்ளது. அந்த அளவு இடத்தைப் பிரித்து நீங்கள் பிறிதொரு பகுதிக்கு எடுத்துக்கொள்ளக் கூடாதென்று அங்குள்ளவர்கள் மறுப்பு தெரிவித்தார்கள். அந்த மருத்துவ மனையில் தங்கியிருந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவர்கூட, "இந்த மருத்துவ மனை ஒன்றையாவது ஒழுங்காக அமைப்புடன் இருக்க உதவி செய்யுங்கள். இட நெருக்கடி மிகுந்த மருத்துவ மனையாக மாற்றி விடாதீர்கள். வேண்டுமானால் இங்கு புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டும்" என்று ஆலோசனை தெரிவித்தார்கள். இந்தப் பிரச்சினையில் இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கிற காரணத்தால், ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. ஆனால் வசதிகளைப் பெருக்கி, ஏழை நோயாளியாக இருந்தாலும், கூடுமானவரையில் அவர்கள் நல்ல முறையில் சிகிச்சை பெறுவதற்கு வசதிகள் செய்து தரப்படும்.

*Rajah Mirasdar Hospital, Thanjavur.*

* 4 *Q*.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU N. SUNDARESA THEVAR) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have received any complaint that the patients in Rajah Mirasdar Hospital, Thanjavur, are undergoing hardship because of the non-availability of necessary medicines; and

(*b*) the steps taken thereon by the Government?